[*2022 ஏப்ரல் 6*

55—

நில அளவை

***25275—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி வட்டம், போடிபாளையம் ஊராட்சி, புது காலனியில் பட்டா வழங்கப்பட்டவர்களுக்கு நில அளவை செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், போடிபாளையம் கிராமம் புல எண் 76/2–ல் 0.39.5 ஏர்ஸ் வண்டிப் பாதையானது அரசு புறம்போக்கு என்ற வகைப்பாட்டிலிருந்து, மாவட்ட ஆட்சியரின் ந.க. எண் 3349/2015/ஆ2 மற்றும் பொள்ளாச்சி வட்டாட்சியரின் ந.க. எண் 14906/2017/ஆ7–ன்படி நத்தமாக நிலமாற்றம் செய்து, 28 நபர்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டு, கிராம மற்றும் வட்டக் கணக்குகளில் மாறுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேற்படி பட்டா வழங்கப்பட்ட இடங்களில் கடந்த 6 வருடங்களில் வீடுகள் ஏதும் கட்டப்படாத நிலமாக உள்ளதை நில அளவீடு செய்ய உள்வட்ட அளவர் மற்றும் கிராம நிருவாக அலுவலர் சென்றபோது, வெளியூர் நபர்களுக்கு ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதை இரத்து செய்ய வேண்டுமென்று போடிபாளையம் கிராமப் பொதுமக்கள் ஒன்றுகூடி தெரிவித்து, இரத்து செய்யும்வரை நில அளவைப் பணி மேற்கொள்ளக் கூடாது எனக் கூறி, கடும் ஆட்சேபணை தெரிவித்ததால் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்பதால் நில அளவைப் பணி மேற்கொள்ள இயலவில்லை எனவும், நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

2022 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு தங்கள் மூலமாக நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட பட்டா தொடர்பாக எந்தவிதமான எதிர்ப்பும் அந்தப் பகுதியில் இல்லை. அந்தப் பகுதி முன்பு பயன்பாடில்லாத வண்டிப் பாதையாக இருந்தது. ஆகவே, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, காலதாமதத்தைத் தவிர்த்து, நூற்றாண்டுக் காலம் பயன்பாடில்லாத அந்த வண்டிப் பாதையை, பட்டா கொடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய, அருந்ததியின மக்களுக்கு உடனடியாக நில அளவை செய்துதர ஆணையிடுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்கி சுமார் ஆறு வருட காலம் ஆகிவிட்டது. 5 ஆண்டுக் காலம் நீங்கள்தான் சட்டமன்ற உறுப்பினராக, துணை சபாநாயகராக இருந்திருக்கிறீர்கள். அந்தக் காலக்கட்டத்தில் அளவீடு செய்து நீங்கள் பட்டா வழங்கவில்லை. காரணம், உள்ளூர்காரர்களுக்கு அல்லாமல் வெளியூர்காரர்களுக்கு அந்த நிலத்தை பட்டா போட்டு வழங்கியதால், உள்ளூர்காரர்கள் எங்களுக்குத்தான் பட்டா வழங்க வேண்டுமென்று சொல்லி, இப்போதும் தகராறு செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவற்றை சுமுகமாக முடிப்பீர்கள் என்றால், உடனடியாக அதற்கு வேண்டிய நில அளவீடு செய்து, பட்டா வழங்குவதற்கான பணிகளை நாங்கள் செய்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாக்கள் அனைத்தும், உள்ளூர் கிராமவாசிகளுக்குத்தான், அதுவும் தாழ்த்தப்பட்ட அருந்ததியின மக்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. அப்படியிருந்தால் அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். காலதாமதம் யாருடைய ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டது என்பதற்கான விவாதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் நல்லவர் என்று நினைக்கிறேன். எனவே, உடனடியாக நிலத்தை அளந்து தர ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு ஆகிய இரண்டு வருவாய் வட்டங்கள் எனது சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்றன. அந்த இரண்டு வருவாய் வட்டங்களிலும் பட்டா வழங்கப்பட்டு, நில அளவீடு செய்யப்படாமல் இருக்கின்ற நிலங்களை உடனடியாக அளவீடு செய்து அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் குடியிருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு கேள்வியாக, மூதாதையர்கள் காலத்திலிருந்து இப்போதுவரை வசித்து வருகிற மக்களுக்கு, நேரடியாக வாரிசுகள் அடிப்படையிலே அவர்களுக்கும் புதிய பட்டாக்கள் வழங்க மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அதில் பிரச்சினை இருந்த காரணத்தினால்தான் 5 வருட காலமாக பட்டா வழங்காமல் இருந்திருக்கிறார்கள். இன்றைக்கே, இப்போதே தாசில்தாரை அழைத்துச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாசில்தாரிடம் பேசுங்கள். சரி என்று சொன்னால், அந்த வேலையை நீங்களே செய்து முடியுங்கள்.

மூதாதையர் காலத்திலிருந்து வசிப்பவர்களுக்கு நிறைய பட்டாக்கள் மாற்றப்படாமல் இருக்கின்றன என்று

2022 ஏப்ரல் 6]

சொல்லியிருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் சரிசெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கிறோம். வாரிசுகள் 1, 2, 3 என்று வருகின்ற காரணத்தினால், அதையெல்லாம் சரிபார்த்து செய்யவேண்டியதாக இருக்கின்றது. அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் சேர்ந்து 3 இலட்சம் பேருக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று target *கொடுத்திருக்கிறார்கள். இதுவரையிலும், பட்டா வழங்கிய பிறகு* survey *செய்து நாம் கொடுப்பதில்லை. விழாவில் பட்டா என்று சொல்லி ஒரு* paper–*ஐ கையில் கொடுத்துவிடுவோம். அந்த இடத்தை இதுவரையிலும் நாம் காண்பித்தது இல்லை. இந்த முறை இடத்தைக் காண்பியுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைக் கவனத்தில் வைத்துக்கொண்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள்.*

திரு. எஸ். காந்திராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் புறம்போக்குப் பகுதிகள் உள்ள கிராமங்களில் வீடு கட்டி மக்கள் நீண்ட காலமாக குடியிருந்து வருகிறார்கள்; மின் இணைப்பையும் பெற்றிருக்கின்றார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. நிறைய பேர் எங்களிடம் மனு கொடுக்கிறார்கள். அவர்களின் மனுவை தாசில்தார் மற்றும் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கிறோம். ஆனால், அவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். பிரச்சினைகள் இல்லாத இடத்தில்கூட பிரச்சினை இருக்கிறது என்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் தவிர்த்து, வீடு கட்டி 30 ஆண்டு காலம், 50 ஆண்டு காலம் குடியிருக்கின்றவர்களுக்கெல்லாம் உடனடியாகப் பட்டா வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை, ஒரு தீர்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் புறம்போக்காக இருந்தாலும் அதிலே வீடுகட்டி அனுபோகத்திலே இருப்பவர்களுக்குப் பட்டா வழங்குவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. தகுந்த நடவடிக்கை எடுக்கச் சொல்கிறோம். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலேயும், உங்கள் தொகுதியில் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை இருந்தால் எனக்கு தகவல் கொடுங்கள் என்று தபால் கொடுத்திருக்கிறேன். அதை நீங்கள் பார்த்துக் கொடுப்பீர்கள் என்று சொன்னால், CLA-விடம் பேசி, வேண்டிய நடவடிக்கைகள் நிச்சயம் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையை தனி தாலுகாவாக அறிவிக்க வேண்டுமென்ற அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அறிவித்தார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி, பட்டா வழங்குதல் தொடர்புடையது. நீங்கள் தாலுகா கேட்கிறீர்கள். இருந்தாலும் பதில் சொல்வார்கள். உட்காருங்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள், பதில் சொல்வார்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடனேயே முத்துப்பேட்டை தனி தாலுகாவாகச் செயல்படத் தொடங்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லுங்கள்.*

2022 ஏப்ரல் 6]

வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

56—

சிப்காட் தொழிற்பூங்கா

***14463—திரு. வி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரம் கிராமத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரம் கிராமத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அதேபோன்று, நமது சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், விவசாயம் அதிகம் இல்லாத ஒரு பகுதியாகும். வேலைவாய்ப்பு இல்லாமல், அங்கிருக்கும் இளைஞர்கள் சென்னைக்கு வேலை தேடி வரக்கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றார்கள். அப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையில், சிப்காட் அமைக்கப்படும், தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று தேர்தல் நேரத்தில்,